# கண்ணீர் அஞ்சலி

**தோற்றம்**
1935 . 01 . 05



**மறைவு**
2024 . 03 . 09

# திரு.முருகேசு காசிப்பிள்ளை

(உரிமையாளர், காசிப்பிள்ளை சக புத்திரர்கள் துரித பணமாற்றுச் சேவை)

கனடா-காரை கலாசார மன்றத்தின் வளர்ச்சியிலும் காரை.மண்ணுக்கான பணியிலும் பெரும் பங்காற்றிய திரு. முருகேசு காசிப்பிள்ளை அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மன்றம் ஆழ்ந்த துயரும் அதிர்ச்சியும் அடைந்துள்ளது. திரு.காசிப்பிள்ளை அவர்கள் 2002ஆம் ஆண்டு மன்றத்தின் தலைவராகப் பணியாற்றிய காலத்திலேயே மன்றம் எழுச்சிபெற ஆரம்பித்தது என்ற வகையில் அன்னார் மன்ற வரலாற்றில் இடம் பிடித்துக்கொண்ட மண்ணின் சேவையாளர். பல ஆண்டுகள் தொடர்ச்சியாக மன்றப் பணிகளுக்கு அனுசரணை வழங்கி வந்த இவரது பெரும் பங்களிப்பும் நன்றியோடு நினைவுகூரத்தக்கதாகும். காரை.மண்ணுக்கு பெருமையைத் தேடித்தந்து சாதனையை ஏற்படுத்திய வர்த்தகப் பெருமக்கள் வரிசையில் முன்னணியில் திகழும் முன்னோடியான வர்த்தகப் பெருமகன். காரை.மண்ணுக்கான அன்னாரது சேவையினாலும் நேர்மையும், கண்ணியமும் மிக்க வர்த்தகப் பணியினாலும் கனடாவாழ் காரைநகர் மக்களினது மட்டுமல்லாது கனடாத் தமிழ் மக்கள் அனைவரதும் பேரன்பினையும் பெரு மதிப்பினையும் பெற்று விளங்கும் பெருமகனாவார். ஊர்ப்பற்றும் சேவையுணர்வும் நிரம்பப் பெற்ற அன்பும், அரவணைப்பும், மனிதநேயமும் மிக்க உன்னதமான பண்பாளர் திரு.காசிப்பிள்ளை அவர்களது இழப்பானது அன்னாரது குடும்பத்துக்கு மட்டுமல்லாது காரைநகர் மக்களுக்கும் பேரிழப்பாக அமைந்து விட்டது எனலாம்.

அன்னாரது இழப்பினால் ஆறாத் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்துக்கும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை கனடா-காரை கலாசார மனறம் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றது.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**கனடா-காரை கலாசார மன்றம்**